1990 ஏப்ரல் 2]

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மின்னழுத்தக் குறைவு என்பது கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமல்லாமல், எங்கள் மாவட்டமான வடார்க்காடு—அம்பேத்கார் மாவட்டத்திலும், குறிப்பாக காட்பாடி வட்டாரத்திலே மின்னழுத்தக் குறைவின் காரணமாகக் குடி தண்ணீர் சில நேரங்களில் கிடைக்காமல் இருக்கிறது. அவற்றைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(9.30 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறைகள் வந்தால், அரசு அதுபற்றி நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு காரணமாக, டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டிருப்பது என்பது, பல மாவட்டங்களிலேயும், பல இடங்களிலேயும் இருக்கின்றது, புதிய டிரான்ஸ்பார்மர்களைப் பொருத்துவது, பொருத்தப்பட்ட டிரான்ஸ்பார்மர்களை பழுது பார்ப்பது, பராமரிப்பது ஆகிய இனங்களுக்காக, மின் வாரியம் போதுமான நிதியை ஒதுக்காத காரணத்தினாலேதான், இக்குறை பாடுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்காக, போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இவற்றைப் போக்குவதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறோம். ஆனாலும். மின் வாரியம் மிகப்பெரிய இழப்பில் இருப்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள் அந்த இழப்பைச் சிறிதேனும் சரிக்கட்ட வேண்டும் என்பதற் காகத்தான், சமீபத்திலே மின்கட்டனத் தொகைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவற்றை நிரந்தர மாகச் சரிபார்த்து, புதுப்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான், பல்வேறு திட்டங்களை வாரியம் வகுத்துக் கொண்டிருக்கிறது.

செம்பனார்கோவில்-தரங்கம்பாடி பாதையை அகலப்படுத்துதல்.

*3769 திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் நெடுஞ் சாலையின் பகுதியான செம்பனார் கோவிலில் இருந்து தரங்கம் பாடி வரையிலும் செல்லும் குறுகிய பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியினுடைய பணி ஆய்வில் இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலிருந்து நாகப்பட்டினத்திற்கும் அதே போல் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூருக்கும் செல்கின்ற நெடுஞ்சாலைகள் நரிமணத்திலிருந்து அதிகமான எடையுள்ள வண்டிகளில் எண்ணெய் எடுத்துக் கொண்டு சென்னைக்கு வருவதன் காரணமாக, அதிகமாகப் பழுது ஏற்பட்டிருக்கின்றன. அந்த சாலைகளைப் பழுதுபார்க்க அதிகமாக நிதி ஒதுக்கித் தருவீர்களா என நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சாலைகள் பழுதுபட்டிருக்கின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகையினாலேதான், 60 கோடி ரூபாய் ஒப்புதலில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காடுகளை எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டு, மீதியை அரசு அதற்கு ஈடுகொடுத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடலாம் என்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த முயற்சியிலேயும் அரசு இறங்கி இருக்கிறது.

திருக் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*1906 திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு நகரில் அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, செய்யாறு நகரில், அருள்மிகு வேதபுரிஸ்வரர் திருக்கோயிலில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளை நிறைவேற்ற அறநிலையத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறுநகரில், அருள்மிகுவேதபுரிஸ்வரர் திருக்கோயிலுக்கு கல்யாண மண்டபம் கட்டுகின்ற பணியை, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த காலத்திலே ஆரம்பித்தார்கள். அது முடியுந்தறுவாயில் கட்டிடம் திறப்